**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இளையான்குடி**
**முன்னிலை: திரு.எம்.சுனில் ராஜா, பி.ஏ., எம்.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இளையான்குடி**
**2021–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ம் நாள் சனிக்கிழமை**
**D.V.O.P.1/ 2018**
**-------**

கஸ்தூரி, (வயது 27/2018)
க/பெ.புரோமியோ (எ) ஜான்புரோமியோ தாஸ்,
திருவள்ளுர் கிராமம், புதூர் அஞ்சல்,
இளையான்குடி வட்டம்,
சிவகங்கை மாவட்டம். ...மனுதாரர்

--எதிர்--

புரோமியோ (எ) ஜான்புரோமியோ தாஸ் (வயது 34/2018)
த/பெ. லேட். கனகராஜ்,
திருவள்ளுர் கிராமம், புதூர் அஞ்சல்,
இளையான்குடி வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

....எதிர்மனுதாரர்

இம்மனுவானது என்முன்பு 03.02.2021 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதார் தரப்பில் வழக்குரைஞர் திரு.M.முத்துச்சாமி, அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதார் தரப்பில் வழக்குரைஞர் திரு.K.அண்ணாதுரை, அவர்கள் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்தும் ஆஜராகாததாலும், இருதரப்பு வாதத்தை கேட்டும் மனு, எதிருரை மற்றும் மனுதார் தரப்பு சாட்சிகள், பாதுகாப்பு அதிகாரியின் விசாரணை அறிக்கை மற்றும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இது நாள் வரை எனது சீரிய பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர்கள் மனைசார் வன்முறையிலிருந்து பெண்களை காப்பாற்றும் சட்டம் பிரிவுகள் 18 முதல் 23 வரையிலான பரிகாரங்களின் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**1. மனுதாரர் வழக்கின் சுருக்கம்:**

1.1. மனுதாரருக்கும், எதிர்மனுதாரர் புரோமியோ (எ) ஜான்புரோமியோ தாஸ்க்கும் கடந்த 31.10.2011ல் இந்திய கிறிஸ்தவ சமய வழக்கப்படி திருமணம் நடைபெற்று, 2 ஆண்குழந்தைகள் இருப்பதாகவும் கூறியுள்ளார். திருமணத்தின்போது மனுதாரர் அணிந்து வந்த 8 பவுன் தங்க நகை மற்றும் எதிர்மனுதாரருக்கு போடப்பட்ட 4 பவுன் தங்கநகையையும் எதிர்மனுதாரர் அடகு வைத்து செலவு செய்துவிட்டதாகவும், அடிக்கடி குடித்து வந்து மனுதாரரை அடித்து உதைத்து கொடுமைப்படுத்தி வந்தார் என்று கூறியுள்ளார்.

1.2 கடந்த 12.05.2017ம் தேதி அன்று எதிர்மனுதாரர் குடித்துவிட்டு வந்து மனுதாரையும் குழந்தைகளையும் அடித்து வீட்டைவிட்டு விரட்டியதாகவும் கூறியுள்ளார். மனுதார் சித்தாள் வேலை செய்து தனது குழந்தைகளின் மருத்துவ, படிப்பு செலவு செய்வதற்கு வழியில்லாமல் மிகவும் சிரமப்பட்டு வாழ்க்கை நடத்தி வருவதாக கூறியுள்ளார்.

1.3 எதிர்மனுதார் மாதம் ரூ.50 ஆயிரம் வருமானம் செய்து வருவதாகவும், திருவள்ளுர் கிராமத்தில் பத்து லட்சம் மதிப்பு உள்ள தார்சு வீடும், புல எண்.166/2ல் பிளாட் நம்பர் 31, 32 ஆகிய வீட்டுமனைகள் உள்ளதாகவும், மானாமதுரையில் 40 லட்சம் மதிப்புள்ள வீடுகள் உள்ளதாகவும், எதிர்மனுதார் போதிய வசதி வாய்ப்புகள் இருந்தும் மனுதார் மற்றும் குழந்தைகளை பராமரிப்பு செய்யாமல் இருந்து வேண்டுமென்றே புறக்கணித்து வருகிறார் என்றும் எதிர்மனுதார் மனுதாருக்கு ஜீவனாம்சமும், குழந்தைகளின் பராமரிப்பு, மருத்துவம், படிப்பு ஆகியவைகளை கொடுக்க கடமைப்பட்டவர் என்று கூறி பிரிவுகள் 18 முதல் 23 வரையிலான பரிகாரங்கள் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார்.

**2. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:**

2.1 மனுதார் கூறுவதுபோல் எதிர்மனுதார் மாதம் ரூ.50 ஆயிரம் சம்பாதிக்கவில்லை என்றும், மனுதார் குழந்தைகளை எதிர்மனுதார் இதுநாள் பராமரிப்பு செய்து வருகிறார் என்றும், மனுதார் திருமணத்தின்போது போடப்பட்டதாக சொல்லப்பட்ட 12 பவுன் நகைகளை எதிர்மனுதார் போட்டதாகவும், எதிர்மனுதார் சம்பாதித்த பணத்தை எல்லாம் மனுதார் வாங்கிகொண்டுவிட்டார் என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்ய கேட்டுள்ளார்.

3. இவ்வழக்கில் இரு தரப்பிலும் ஒத்துக்கொள்ளப்பட்ட சங்கதிகள்:

- மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 31.10.2011ல் திருமணம் நடைபெற்றது.
- மனுதாரர் எதிர்மனுதாரரின் மனைவி.

**4. தீர்மானிக்கப் படவேண்டிய பிரச்சனை**:

1. மனுதாரர்கள் கோரியபடி எதிர்மனுதாரரால் மனுதாருக்கு குடும்ப வன்முறை ஏற்பட்டுள்ளதா?
2. மனுதார் கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

5. இவ்வழக்கில் மனுதாரர் தரப்பில் ம.சா.1ஆக மனுதாரர் கஸ்தூரி என்பவர் விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ1 மற்றும் ம.சா.ஆ2 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதார் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. மேலும் இவ்வழக்கில் பாதுகாப்பு அதிகாரி தனது விசாரணை அறிக்கையை

(Domestic Incident Report) தாக்கல் செய்துள்ளார்.

7. முதல் பிரச்சனைக்கான தீர்வு:

மனுதார் கோரியபடி எதிர்மனுதாரால் மனுதாருக்கு குடும்ப வன்முறை ஏற்பட்டுள்ளதா?

7.1. இவ்வழக்கில் மனுதாரர் தனது சாட்சியத்தில் மனுதாருக்கும், எதிர்மனுதாரருக்கும் 31.10.2011ல் இந்திய கிறிஸ்தவ சமய வழக்கப்படி திருமணம் நடைபெற்று, 2 ஆண்குழந்தைகள் இருப்பதாகவும், திருமணத்தின்போது மனுதாரர் அணிந்து வந்த 8 பவுன் தங்க நகை மற்றும் எதிர்மனுதாரருக்கு போடப்பட்ட 4 பவுன் தங்கநகையையும் எதிர்மனுதாரர் அடகு வைத்து செலவு செய்துவிட்டதாகவும், அடிக்கடி குடித்து வந்து முதல் மனுதாரரை அடித்து உதைத்து கொடுமைப்படுத்தி வந்ததாகவும், 12.05.2017ம் தேதி அன்று எதிர்மனுதாரர் குடித்துவிட்டு வந்து மனுதாரையும் குழந்தைகளையும் அடித்து வீட்டைவிட்டு விரட்டியதாகவும், மனுதார் சித்தாள் வேலை செய்து தனது குழந்தைகளின் மருத்துவ, படிப்பு செலவு செய்வதற்கு வழியில்லாமல் மிகவும் சிரமப்பட்டு வாழ்க்கை நடத்தி வருவதாகவும், எதிர்மனுதார் மாதம் ரூ.50 ஆயிரம் வருமானம் செய்து வருவதாகவும், திருவள்ளூர் கிராமத்தில் பத்து லட்சம் மதிப்பு உள்ள தார்சு வீடும், புல எண்.166/2ல் பிளாட் நம்பர் 31, 32 ஆகிய வீட்டுமனைகள் உள்ளதாகவும், மானாமதுரையில் 40 லட்சம் மதிப்புள்ள வீடுகள் உள்ளதாகவும், எதிர்மனுதார் போதிய வசதி வாய்ப்புகள் இருந்தும் மனுதார் மற்றும் குழந்தைகளை பராமரிப்பு செய்யாமல் இருந்து வேண்டுமென்றே புறக்கணித்து வருகிறார் என்றும் எதிர்மனுதார் மனுதாருக்கு ஜீவனாம்சமும், குழந்தைகளின் பராமரிப்பு, மருத்துவம், படிப்பு ஆகியவைகளை கொடுக்க கடமைப்பட்டவர் என்றும் கூறியுள்ளார்.

7.2 எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைக்கு எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகததால் 23.12.2020 அன்று ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டு மனுதாரர் தரப்பு சாட்சியம் எடுக்கப்பட்டுள்ளது.

7.3 இவ்வழக்கில் மனுதாரர் கூறியுள்ள குற்றச்சாட்டுக்களை காணும்போது எதிர்மனுதாரர், மனுதாரரை மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் மற்றும் பொருளாதார ரீதியான (economical) வன்முறைகள் செய்ததாக கூறியுள்ளார். இம்மனுவில் குடும்ப வன்முறை ஏற்பட்டுள்ளதா என்பதை காணும் முன்பு இது குறித்த சட்ட வகைமுறைகளை காணுதல் அவசியம் ஆகும்.

7.4 இம்மனுவின் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கிடையே திருமணம் இருதரப்பிலும் ஒத்துக்கொள்ளப்பட்டிருப்பதால் பிரிவு 2(f)ன் படி மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கிடையே குடும்ப உறவுமுறை இருப்பதால் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005 பிரிவு 2(a) ன் கீழ் மனுதார் பாதிக்கப்பட்ட நபர் ஆவார்.

7.5. மேற்படி சட்டம் பிரிவு 3 ஆனது குடும்ப வன்முறை என்பதற்கான வரையறையை கூறுகிறது. அதன் படி உடல் ரீதியான, பாலியல் ரீதியான, வார்த்தையால் & மன ரீதியான மற்றும் பொருளாதார ரீதியான துஷ்பிரயோகம் தொடர்பான வன்முறைகள், சட்ட முரணாக வரதட்சணை அல்லது வேறுவகையான சொத்துக்களை கேட்டல், மேற்படி செயல்களுக்காக பாதிக்கப்பட்ட நபரை மிரட்டுதல் போன்றவைகள் இதிலடங்கும்.

7.6. குடும்ப வன்முறை குறித்த வழக்குகளில் Prepondenrance of Probability விதியின் படி வழக்கு தரப்பினர்கள் தங்களது வழக்கை (burden of proof) நிரூபித்தால் போதுமானது ஆகும். குற்றவியல் வழக்குகளை போன்று Beyond reasonable doubt ஆக நிரூபிக்கவேண்டியதில்லை. எனவே இது போன்ற வழக்குகளில் நீதிபதி மேற்படி Prepondenrance of Probability கோட்பாட்டின்படி தான் வழக்கை பரிசீலிக்க வேண்டும்.

7.7 இந்த வழக்கில் மனுதாரர் தனது சாட்சியத்தில் எதிர்மனுதாரர் மனுதாரரின் நகைகளை எடுத்துச்சென்று அடகு வைத்து குடித்து அழித்துவிட்டதாகவும், எதிர்மனுதார் தினம் தினம் குடித்துவந்து அடித்து கொடுமைப்படுத்துவதாகவும், குடித்துவிட்டு வரும் சமயங்களில் வீட்டில் உள்ள பொருட்களை கீழேபோட்டு உடைத்துவிட்டார் என்றும் 12.05.2017 அன்று குடித்துவிட்டு வந்து மனுதாரரையும், குழந்தைகளையும் அடித்து வீட்டைவிட்டு வெளியே விரட்டிவிட்டார் என்றும் எதிர்மனுதாரர் கொடுமை தாங்காமல் மனுதாரர் இரண்டு குழந்தைகளுடன் பெற்றோர் வீட்டில் கஷ்டஜீவனம் செய்து வருவதாகவும் குழந்தைகளின் படிப்பு செலவிற்கு சிரமப்படுவதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். எதிர்மனுதாரர் ஒருதலைப்படுத்தப்பட்டுள்ளதால் அவர் தரப்பில் சாட்சிய்ஙகள் எதுவம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

7.8 மனுதாரர் தரப்பு சாட்சியங்களை கவனமுடன் பரிசீலித்தபோது எதிர்மனுதாரர் மனுதாரருக்கு குடும்ப வன்முறை ஏற்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**8. இரண்டாவது பிரச்சனைக்கான தீர்வு:**

மனுதாரர் கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

8.1 இவ்வழக்கில் மனுதாரர்,

i) மனுதாரர் வசிக்கும் உரிமையை நிலைப்படுத்த எதிர்மனுதார் இளையான்குடி டவுனில் தனியாக வீடுவசதி ஏற்படுத்தி கொடுக்க உத்தரவு பிறப்பிக்கக்கோரியும்,

ii) மனுதாரருக்கு திருமணத்தின்போது போட்ட 12 பவுன் நகை மற்றும் ரூ. 1 லட்சம் மதிப்புள்ள சீதனப் பொருட்களை மனுதார் வசம் ஒப்படைக்கக்கோரியும்,

iii) மனுதாருக்கு மாதம் ரூ.10 ஆயிரமும், மனுதாரின் இரண்டு குழந்தைகளுக்கும் தலா ரூ. 10 ஆயிரமும் மொத்தம் ரூ. 30,000/– (முப்பாதியிரமும்) ஜீவனாம்சம் கொடுக்கக்கோரியும்,

iv) எதிர்மனுதாரருக்கு சொந்தமான தனித்த சொத்தான புல எண்.166/2 பிளாட் நம்பர் 31, 32 பொறுத்து எவ்வித வில்லங்க, விவகாரங்கள், விற்பனை ஒப்பந்தம், அடமானம், ஒத்தி ஆகியவை செய்யக்ககூடாது எனக் கோரியும் மற்றும் இதர பரிகாரங்களும் வழங்க கேட்டுள்ளார்.

8.2. நீதித்துறை நடுவர் குடும்ப வன்முறை நடைபெற்றுள்ளது என தன்னிறைவு கொள்ளும் பட்சத்தில் பிரிவு 19ன் கீழ் உறைவிட உத்தரவு வழங்க முடியும். இம்மனுவில் ஏற்கனவே தீர்வுக்கான பிரச்சனை 1ல் எதிர்மனுதாரரால் மனுதாரருக்கு குடும்ப வன்முறை ஏற்பட்டுள்ளது என்று தீர்வு காணப்பட்டுள்ளது எனவே மனுதாரர்க்கு பிரிவு 19ன் கீழ் பரிகாரம் வழங்கலாம் என்று தீர்வுசெய்யப்படுகிறது.

8.3 இம்மனுவில் மனுதாரர் திருமணத்தின்போது போடப்பட்ட 12 பவுன் நகை மற்றும் 1 லட்சம் மதிப்புள்ள சீதனப்பொருட்களை கொடுக்க கேட்டுள்ளார். ஆனால் மனுதாரர் தரப்பு சாட்சியத்தில் மேற்படி நகைகள் பற்றியோ அல்லது சீதனப்பொருட்கள் பற்றியோ எந்தவிதமான சாட்சியமும் அளிக்கப்படவில்லை. இவ்வாறு நகைகளும், சீதனப்பொருட்களும் கொடுக்கப்பட்டதாகவும் அவை எதிர்மனுதார் வசம் உள்ளதாகவும் எந்த சாட்சியமும் மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் அளிக்கப்படாத நிலையில் மேற்படி பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

8.4. மனைவியை பராமரிக்கும் பொறுப்பு கணவருக்கு உண்டு என்பது நன்கு முடிவுசெய்யப்பட்ட சட்டம் ஆகும். இவ்வழக்கில் மனுதாரர் வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாக கூறியுள்ளபோதிலும் மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் மாதம் ரூ.50,000/—ம் வருமானம் ஈட்டுவதாகவும் 10 லட்சம் மதிப்புள்ள தார்சு வீடு மற்றும் நிலங்கள் உள்ளதாகவும் மானாமதுரையில் 40 லட்சம் மதிப்பில் வீடு உள்ளதாகவும் வாய்மொழி சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி எதிர்மனுதாரருக்கு மாதம் 50,000/—ம் ரூபாய் வருமானம் வருவதாகவோ, எதிர்மனுதாரர் பெயரில் வீடும், நிலங்களும் உள்ளதாகவோ மனுதாரர் தரப்பில் எந்த சாட்சியமும் அளிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் தனது குழந்தைகளை படிக்க வைக்க வசதியில்லாமல் பெற்றோர் வீட்டில் கஷ்டஜீவனம் செய்து வருவதாக சாட்சியமளிக்கப்பட்டுள்ளது. மேற்படி சாட்சியத்திலிருந்து மனுதாரருக்கு பொருளாதார ரீதியில் குடும்ப வன்முறை நிகழ்ந்துள்ளது என்றும் மேலும் பொருளாதார ரீதியிலான வன்முறை ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே எதிர்மனுதாரர் மனுதாரர் மற்றும் அவரது இரு குழந்தைகளுக்கும் பராமரிப்புத்தொகை வழங்க உத்தரவிடவேண்டியது அவசியம் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

8.4. மேலும் ஏற்கனவே எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு ஜீவனாம்சம் வழங்க வேண்டும் என்று தீர்வு கண்டுள்ளதால் எவ்வளவு தொகை வழங்க வேண்டும் என்று காணும் போது மனுதாரருக்கு மாதம் ரூ.10,000/—ம் மற்றும் அவரது இரு குழந்தைகளுக்கும் மாதம் தலா ரூ.10,000/—ம் என ஆக மொத்தம் ரூ.30,000/—ம் கோரியுள்ளார். மேற்படி தொகை வழங்கத்தக்கதா என்று எதிர்மனுதாரரின் வருமானம் குறித்து பார்க்கையில் மனுதாரர் தனது மனுவில் எதிர்மனுதாரர் மாதம் ரூ.50,000/—ம்

வருமானம் ஈட்டுவதாகவும் 10 லட்சம் மதிப்புள்ள தார்சு வீடு மற்றும் நிலங்கள் உள்ளதாகவும் மானாமதுரையில் 40 லட்சம் மதிப்பில் வீடு உள்ளதாகவும் கூறியிருந்தாலும் அதுதொடர்பாக எந்த ஆவண சாட்சியத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வாய்மொழி சாட்சியம் மட்டுமே எதிர்மனுதாரர் சென்னையில் மசாலா கம்பெனி வைத்து நடத்திவருவதாக அளிக்கப்பட்டுள்ளது. எது எப்படியிருப்பினும் நல்ல உடல் ஆரோக்கியமான ஒரு மனிதரால் தினசரி கூலி வேலைக்கு சென்றால்கூட ரூ.500/− வரை வருமானம் ஈட்ட முடியும். ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் எதிர்மனுதாரர் மசாலா கம்பெனி நடத்திவருவதாக கூறப்பட்டுள்ளது. ஆகவே, எதிர்மனுதாரரை பொறுத்தவரை உண்மையிலேயே மனுதாரர் கூறுவதுபோல மாதம் ரூ.50,000/−ம் வருமானம் பெறவில்லையென்றாலும் கூட அவரால் மாதம் சுமார் ரூ.25,000/−ம் வரை வருமானம் ஈட்டமுடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே எதிர்மனுதாரரின் வருமானம் ரூ.25,000− என்று கொண்டு மனுதாரர்களுக்கு தற்போதைய நிலையில் அவர்களை பராமரிக்க மனுதாரருக்கு ரூ.5,000/−ம், அவரது இரு குழந்தைகளுக்கு தலா ரூ.3,500−ம் வீதம் மொத்தம் ரூ.7000/−மும் ஆக மொத்தம் ரூ.12,000/−மும் வாழ்க்கை பராமரிப்பு தொகை வழங்க உத்தரவிட வேண்டும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8.5. மேலும் இம்மனுவில் மனுதாரர்கள் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாக கோரியும் எதிர்மனுதாரர் தரப்பில் இந்நாள் வரை மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் ஜீவனாம்ச தொகையோ அல்லது ஏதேனும் இழப்பீட்டு தொகையோ வழங்கியிருப்பதாகவோ அல்லது வழங்கி வருவதாகவோ எந்த விவரத்தையும் தாக்கல் செய்யவில்லை. எனவே இம்மனுவின் தன்மை கருதி மேற்படி மனுதாரருக்கு ஜீவனாம்ச தொகையை எதிர்மனுதாரர் இம்மனு தாக்கல் செய்த தேதி 29.01.2018 முதல் வழங்க உத்தரவிடுவது அவசியம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. 4 வது பரிகாரத்தை பொறுத்தவரை மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரருக்கு இருக்கும் சொத்துக்கள் மற்றும் வீடுகள் குறித்து எந்த ஆவண சாட்சியங்களும் தாக்கல் செய்யப்படாத சூழ்நிலையில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரங்கள் வழங்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

10. ஏற்கனவே இந்த அசல் DVOP No.1/2018 வழக்கு நிலுவையில் இருந்த காலத்தில் Crl.M.P.No.324/2018−ன் கீழ் 24.10.2018 அன்று இடைக்கால வாழ்க்கைப்பொருளுதவியாக எதிர்மனுதாரர் மனுதாரருக்கு ரூ.15,000/−த்தை வழங்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மேற்படி உத்தரவின் கீழ் எதிர்மனுதாரர் பராமரிப்பு தொகை ஏதேனும் கொடுத்திருந்தால் அதனை இந்த அசல் வழக்கில் தற்போது பிறப்பித்திருக்கும் பராமரிப்பு தொகையில் சரியீடு செய்துகொள்ளவும் உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமென்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

11. இறுதியாக,

i) குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவு 20(1)(d) மற்றும் பிரிவு 20(3)−ன் கீழ் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு மாதம் ரூ.5,000−மும் அவரது இரு குழந்தைகளுக்கும் மாதந்தோறும் தலா ரூ.3,500/− வீதம்

ரூ.7,000/- ஆக மொத்தம் ரூ.12,000/-ம் ஜீவானாம்சமாக மனுத்தாக்கல் செய்த தேதியான 29.01.2018 முதல் வழங்க வேண்டுமென்றும், அந்த ஒவ்வொரு மாத இடைக்கால ஜீவனாம்ச தொகையையும் அடுத்த ஆங்கில மாதம் 5 ம் தேதிக்குள் பணவிடை மூலமாகவோ, நேரிலோ, மனுதாரரின் வங்கி கணக்கிலோ எதிர்மனுதார் செலுத்த வேண்டும் என்றும்,

ii) எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இந்த வழக்கு நிலுவையில் இருந்த காலத்தில் ஏதேனும் பராமரிப்பு தொகை வழங்கியிருந்தால் அதனை தற்போது இந்த உத்தரவின் மூலம் கொடுக்கப்பட்டுள்ள பராமரிப்பு தொகையில் சரியீடு செய்துகொள்ள வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

iii) உத்தரவின் நகல் ஒன்றை பிரிவு 20(4) ன் கீழாக எதிர்மனுதார் வசிக்கக்கூடிய பகுதிக்குரிய காவல்நிலையத்திற்கு அனுப்ப வேண்டும் என்றும் மனுதாருக்கு இதன் நகலை இலவசமாக வழங்க வேண்டும் என்றும் இவ்வுத்தரவு தொடர்பாக மனுதார் காவல்நிலையத்தில் உதவி கோரினால் காவல்நிலைய அதிகாரி குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005 பிரிவு 19(5)ன் படி பாதிக்கப்பட்ட மனுதாருக்கு உரிய பாதுகாப்பு அல்லது உதவி வழங்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்துப்பார்த்து பிழைத்திருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 17.04.2021 அன்று உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

Sd/-எம்.சுனில் ராஜா, பி.ஏ., எம்.எல்.,17.4.21
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர், இளையான்குடி.

பின் இணைப்பு:

1. மனுதார் தரப்பு சாட்சிகள்:
   ம.சா.1 – திருமதி. கஸ்தூரி
2. எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள்: இல்லை
3. மனுதார் தரப்பு சான்றாவணங்கள்:
   ம.சா.ஆ.1 – ம.சா.1 ன் திருமணப்பத்திரிக்கை அசல்
   ம.சா.ஆ.2 – ரேசன்கார்டு நகல்
4. எதிர்மனுதார் தரப்பு சான்றாவணங்கள்: இல்லை

Sd/-எம்.சுனில் ராஜா, பி.ஏ., எம்.எல்.,17.4.21
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர், இளையான்குடி.

--உண்மை நகல்--